For all Ceremonies
At your homes
Our Service available

OLI ILLAM

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

உடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 27 திங்கட்கிழமை (11 - 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 225

தரைப் பந்தல், ஒலிபெருக்கி, மின்சார ஒளி, பிரகாசம் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒலி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருகில்)
யாழ்ப்பாணம்

# ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச்சு

## பத்திரிகையாளர் மாநாட்டில் செயலாளர் சேனநாயக்கா

கொழும்பு, ஜூலை 11

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் பட்சத்தில், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுகளை நடத்தப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்திருக்கிறது:

கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்,

பேச்சுவார்த்தை நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டியதில்லை.

பூர்வாங்கப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே பிரபாகரன் கலந்து கொள்ளவேண்டியதில்லை.

இவ்வாறு திரு. சேனநாயக்கா மேலும் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு தாக்கல் இன்று இறுதி நாள்

கொழும்பு, ஜூலை 11

பொதுத் தேர்தலுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதி நாள் இன்றாகும். இன்று நண்பகல் 12 மணி வரை மட்டுமே வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்; (ஐ)

## ரயில் குண்டு வெடிப்பு நடந்தது எவ்வாறு?

கடந்த சனிக்கிழமை அதிகாலை அனுராதபுரம் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற ரயில் குண்டுவெடிப்புச் சம்பவம் பற்றி பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

பயணிகள் இறங்கிய பின்னர் ரயில் புறப்படத் தயாரான சமயம், வெளியில் இருந்து சிறிய கைக்குண்டு ஒன்று ரயில் பெட்டிமீது வீசப்பட்டிருக்கலாம் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

ரயில் பெட்டியில் இருந்த பயணி ஒருவரிடம் வெளியில் இருந்த ஒருவர் பார்சல் ஒன்றைக் கொடுத்ததாகவும் — அதன்பின்னர் மின்னல் போன்ற வெளிச்சம் தெரிந்ததை அடுத்து குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் அதே ரயிலில் பயணம் செய்து நேற்று யாழ். வந்த பயணி ஒருவர் தெரிவித்தார். (அ-எ-3)

## எதிரணியில் சேருவதால் பாதுகாப்பை இழக்கும் முன்னாள் அரச எம்.பிக்கள்

கொழும்பு, ஜூலை 11

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிய முன்னாள் தேசியப்பட்டியல் எம்.பியான காலிங்க ஒபேவன்ஸவுக்கு வழங்கப்பட்டு வந்த பொலீஸ் பாதுகாப்பு மேலிட உத்தரவின் மீது வாபஸ் பெறப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த அனைவருக்கும் தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வரும் வேளையில் — தமக்குமட்டும் வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு ஏன் விலக்கப்பட்டது என்று திரு. ஒபேவன்ஸ பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவை கேட்டிருக்கிறார்.

காமினி திஸநாயக்காவுக்கு இடமளிப்பதற்காகப் பதவி விலகிய எம்.பிக்கு தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த முனைகளில் இருந்து படையினர் தெற்குக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 11

தென்னிலங்கையில் நடக்கவிருக்கும் தேர்தலை முன்னிட்டு, அங்கு பாதுகாப்பு வழங்குவதற்காக, வடக்கு — கிழக்கு யுத்த முனைகளில் இருந்து படையினர் அழைத்துச் செல்லப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

வடக்கு-கிழக்கு முகாம்களில் இருந்து படையினர் விமானங்கள் மூலம் தினமும் இரத்மலானை விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வாகனங்கள் மூலமாக காலி வீதி வழியாக கோட்டையில் உள்ள இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## கல்குடாவில் தாக்குதல்: பொலீஸார் இருவர் பலி!

கொழும்பு, ஜூலை 11

மட்டக்களப்பு கல்குடா பொலீஸ் நிலையத்துக்கு அருகே கடந்த வியாழன் இரவு 7.40 மணியளவில் பொலீஸ் அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸார் இருவர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கல்குடா பகுதியிலும், வாழைச்சேனையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-3)

## யாழ்தேவி குண்டு வெடிப்பில் இறந்த இருவரும் தமிழர்களே

### ஒருவர் பொறியியலாளர், மற்றவர் பெண்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடந்த சனிக்கிழமை காலை அனுராதபுரத்தில் இடம்பெற்ற ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது உயிரிழந்த இருவரும் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பொறியியலாளர் ஒருவரும் —

வெளிநாட்டில் இருந்து கொழும்பு திரும்பி, பின்னர் தமது தந்தையுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர் என்று தெரியவந்ததாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ரயில் என்ஜினில் இருந்து இரண்டாவதாக காணப்பட்ட 3 ஆம் வகுப்புப் பெட்டியில் தான் குண்டு வெடித்ததாகவும்—இதனால் அப்பெட்டிக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வினாத்தாள் முதற்தொகுதி 29 ஆம் திகதி வந்து சேரும்

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சையின் முதலாவது தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி விமான மூலம் எடுத்து வரப்படவிருக்கின்றன.

பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் இவற்றை விமான மூலம் பலாலிக்கு எடுத்துவந்து பின்னர் காங்கேசன்துறையில் இருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை —

பரீட்சைக்கான காகிதாதிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி கப்பலில் எடுத்து வர ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது [எ-3]

## குண்டு வெடித்த சிறிது நேரத்தில் இருவரை 'ஸ்ரெச்சரில்' வைத்து தள்ளிச் சென்றதைக் கண்டேன்

### பயணி ஒருவர் பேட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 11

ரயில் பெட்டிக்குள் குண்டு வெடித்ததை அடுத்து, ஒரு பெண்ணையும் ஒர் ஆணையும் "ஸ்ரெச்சரில்" வைத்து தள்ளிக் கொண்டு செல்வதைக் கண்டேன்.

உடுவிலைச் சேர்ந்த நடேசபிள்ளை என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்-

அனுராதபுரம் ரயில் நிலையத்தில் குண்டு வெடிப்புக்கு இலக்கான ரயிலில் பயணஞ் செய்தவர் நடேசபிள்ளை.

யாழ். திரும்பிய அவர் முன் கண்ட தகவலை உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது

அதிகாலை அரைத்தூக்கத்தில் இருந்தேன் ரயில் அனுராதபுரத்தில் நின்றதும் பய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பரீட்சைக்கு 2 இணைப்பு நிலையங்கள்

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சைக்கான இணைப்பு அலுவலகங்கள்— வலயத்துக்கு ஒன்றாக— இரண்டு அமைக்கப்படவிருக்கின்றன.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தில் ஒரு பரீட்சை இணைப்பு நிலையமே செயற்பட்டு வந்தது.

கல்வி வலயம் ஒன்றுக்கான இணைப்பு நிலையம் சென். பொஸ்கோ வித்தியாலயத்திலும்—

கல்வி வலயம் இரண்டுக்கான இணைப்பு நிலையம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் அமையும்.

இந்த இணைப்பு நிலையங்கள் அந்தந்த வலயத்தில் பரீட்சையை நடத்துவதற்கும் பொறுப்பாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## புலிகள் - படையினர் வவுனியாவில் மோதல்

### போராளிகள் இருவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 11

வவுனியாவில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது

அந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளான கப்டன் எழில்வாணன் (கறுப்பையா சின்னகுமார்— செட்டிகுளம்), லெப்டினன்ட் தேவன் (சகாயஆனந்தன் அன்ரனி தோமஸ் — குருமன்காடு, வவுனியா) ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.

இந்த மோதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (ஐ)

## தேர்தலை நிறுத்தக் கோரும் மனு இன்று விசாரணை

கொழும்பு, ஜூலை 11

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்குப்பதிவு நடைபெறுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை இன்று நடைபெறும்.

தெல்லிப்பழையில் யாழ் செயலகத்தையும், தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகத்தையும் வைத்து தேர்தல் நடத்துவதால்—

யாழ் தேர்தல் மாவட்டத்தில் உள்ள 80 சதவீதமான வாக்காளர்களின் வாக்குரிமை மறுக்கப்படும் என்ற காரணத்தையும் —

மற்றும் பல காரணங்களை முன்வைத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மனுவை வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தது தெரிந்ததே.

அந்த மனுவே இன்று விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது. (அ-3)

### முச்சந்தி முரலி



எல்லாம் தேர்தல் முடியும் மட்டும் தான் பாருங்கோ...!

## கொழும்பில்வாழும் தமிழர்கள் வடக்கு நோக்கி வருகை

### அங்கு பீதிநிலை நிலவுகிறதாம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

கொழும்பில் அச்சமேற்பட்டுள்ள ஒரு பீதி நிலை காரணமாக தமிழ் மக்கள் வடக்கு நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டது

கொழும்பில் தேர்தல் சூடு பிடித்துள்ள இந்நேரத்தில் தமிழர் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளதாலும் —

தமிழ் மக்கள் நிம்மதியாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலும் - கொழும்பில் உள்ள தமிழர்கள் வடக்கு நோக்கி வர ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மட்டும் கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில்களில் சுமார் ஐயாயிரம் பயணிகள் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருவதற்காக கோட்டை ரயில் நிலையத்துக்கு நேற்று முன்தினம் வந்த ஏராளமான பயணிகள் ரயிலில் இடம் கிடைக்காது திரும்பியதைக் காணக் கூடியதாக இருந்ததாக நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் பலர் உதயனுக்கு தெரிவித்தனர்.

கொழும்பில் நீண்ட கால

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழர் கைது; மேலும் தீவிரமடைகிறது

கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் தேர்தல் சூடு பிடித்துள்ள இந்நேரத்தில்—

இராணுவத்தினர் தமிழர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போது பொலிஸாருக்குப் பதிலாக இராணுவத்தினரே தமிழ் இளைஞர்கள், யுவதிகளை கைது செய்து வருகின்றனர் என்றும் —

தமிழர்கள் தங்கியிருக்கும் விடுதிகள் வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது

இதேவேளை விதிச்சோதனைகளும் மிகவும் தீவிரமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (எ-3)

## பரீட்சையை குழப்பாமல் பிரசாரத்தில் ஈடுபடுங்கள்

### பரீட்சை ஆணையாளர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை நிலையங்களுக்கும் அசௌகரியம் ஏற்படுத்தாத விதத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

பொதுத் தேர்தலை ஒட்டி ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை — எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இரு கட்டங்களாக நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணங்களையும் அவர் விளக்கினார்.

## வீடுதேடிவரும் அரசியல்வாதிகளிடம் யுத்தத்துக்கு தீர்வைக் கேளுங்கள்!

### தென்னிலங்கை மக்களிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 11

வீட்டுக் கதவைத் தட்டி வாக்கு வேட்டையாட வரும் அரசியல்வாதிகளிடம் "யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் தீர்வு உங்களிடம் உண்டா?" என்பதை முதலில் கேட்கும்படி தென் இலங்கை வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வறக்காப்பொலை நகர மண்டபத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் 'யுக்திய' சிங்கள வாரஇதழ் ஆசிரியர் சுஜீவ திஸநாயக்கா முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கு எந்த அரசியல் வாதியும் முன் வருவதாக இல்லை. யுத்தத்தைக் காரணம் காட்டி [illegible] படியும் ஆளை [illegible] கள் நினைத்துக் கொண்டுள்ளார்கள் என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் இன்று நடக்கும் யுத்தம் பற்றிய உண்மைகளை நாட்டில் எந்தப் பத்திரிகையும் வெளியிடுவதில்லை என்றும் அவர் கூறினார். 'அத்த' பத்திரிகையின் ஆசி[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியா மாவட்டத்தில் 20 தமிழ் இளைஞர்கள் கைது

### பொலீஸ் ரோந்து அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 11

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த வாரத்தில் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் 20 இளைஞர்கள் வரையில் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுற்றிவளைத்து நடத்தப்பட்ட தேடுதலின் போது சோதனைத் தடை முகாம்களில் வைத்து இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும்—

நுவரெலியாவில் வாழும் இந்தியத் தமிழர்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தாத விதத்தில் இந்த நடவடிக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய போட்டோ பிரதி இயந்திரம் - Gestetner Copier 8201 விற்பனைக்கு உண்டு. அறிவரன், இல. 809, அரசனா வீதி, யாழ்ப்பாணம் (வானவில்லுக்கு அருகில்) (31781)

அழகிய உயரின ஜேர்மன் செப்போட் அல்சேஷன் நாய்க் குட்டிகள் (மூன்று மாத வயதுடையவை) உடன் விற்பனைக்குண்டு இல. 27, முதலாம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பின்னால்). (31829)

பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. முகவரி: இல. 179, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31857)

### விற்பனைக்கு

Inter Come (அலுவலகத்திற்கு உரியது) (ஜேர்மன் தயாரிப்பு) Philips 3 Speakers (மண்டபங்களுக்கு உரியது) (12W - 8. Ohms 100V) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 'Zamsiva', கஸ்தூரியார் வீதி சந்தை முன்பாக, யாழ்ப்பாணம். (31851)

### ஆனந்தம் சீயாக்காய்

எமது உடம்புக்கு சிரசே பிரதானம். ஆயுர்வேதமுறைப்படி தயாரிக்கப் பெற்ற ஆனந்தம் சீயாக்காய் பவுடர் என்று கேட்டுவாங்கி பயன் பெறவும். [7486]

### காவேரி சீயாக்காய்

இன்று தமிழீழத்தில் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய் பவுடர் காவேரி. தரம் நிரந்தரம். எல்லா வர்த்தகர்களிடமும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. தயாரிப்பாளர்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். [31787]

### இடமாற்றம்

ஓட்டுமடம் பொன்னப்பா ஒழுங்கையில் இயங்கிவந்த எனது வைத்தியசாலை தற்பொழுது யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சந்திக்கு அருகாமையில் (சிவன் வடக்கு வீதி) இயங்கிவருகிறதென்பதை அறியத் தருகிறேன். வைத்தியர் சிவசம்பு. (31858)

## நாளை

யா/ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி ச. சோமலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ் வலயம் இரண்டின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கலந்து கொள்வார். (எ)

# வேட்பாளர்களை செவ்வாய் வருமாறு பொ.ஐ.மு அழைப்பு

கொழும்பு, ஜூலை 10

பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வருமாறு முன்னணித் தலைமைப்பீடம் அழைத்துள்ளது.

வேட்பாளர்கள் கலந்து கொள்ளும் இக்கூட்டத்திற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார்.

முக்கிய உரையை கட்சியின் பிரதித் தலைவரும் மேல் மாகாண முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா நிகழ்த்துவார். என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## வாழைச்சேனையில் இளைஞர் கைது

கொக்கட்டிச்சோலையில் நிலைகொண்டுள்ள படையினரால் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலுப்பையடிச்சேனையைச் சேர்ந்த கந்தசாமி ரகு (வயது 25) என்பவரே கைது செய்யப்பட்டார்.

வாழைச்சேனையில் வைத்து கடந்த 7 ஆம் திகதி படையினர் இவரைக் கைது செய்தனர். (ஐ)

---

பட்டப்பின் கல்வித்தகைமை கற்கைநெறி

## 1993/94

பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறிக்கான அனுமதிப் பரீட்சை 1994 - 07 - 22ஆம் திகதி இராமநாதர் மண்டபத்தில் நடைபெறும். இப்பரீட்சைக்கான அனுமதி அட்டையை பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் 1994 - 07 - 18 ஆம் திகதி தொடக்கம் 1994 - 07 - 21 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

அனுமதிப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் சித்தியடைந்தோர் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது நிரந்தர பட்டதாரி ஆசிரியருக்கான நியமனக் கடிதம் கொண்டு வருதல் வேண்டும்;

பதிவாளர்,<br>யாழ், பல்கலைக்கழகம்<br>கல்வியங்காடு,<br>யாழ். பல்கலைக்கழகம்.<br>08-07-1994.

(சி-8725)

---

உ

திருநெல்வேலி

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் இரதோற்சவம்

13 07-94 புதன்கிழமை அதிகாலை 5-00 மணிக்கு மூலஸ்தானப் பூஜையும், காலை 6-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் காலை 8-00 மணிக்கு அடியார்களிற்கு திருவருள்பாலிக்கும் வண்ணம் அகில புவனமாதாவாகிய அன்னை பராசக்தி. மும்மூர்த்திகளோடு ஆனந்தப் புன்முறுவல் பூத்தவண்ணம் அகிலத்தில் அதர்மத்தை அழிப்பவளாக சிவந்த மேனியோடு அழகிய காஞ்சிப்பட்டாடை பளபளக்க அழகிய புஷ்பங்கள் மணமணக்க சின்னப்பெண்போல் சிம்மாசனத்தில் வீற்றிருந்து பூமழைபொழிய அரோகரா என்னும் கோஷம் வானை பிளக்க அதனூடாக இரதம் ஏறுவதற்கு வரும் கண்கொள்ளாக் காட்சியை அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கண்டு களித்து அன்னையின் திருவருள் கடாட்சத்தினை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கிறோம்.

14-07-94 அன்று தீர்த்தோற்சவம்; காலை 7-30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், 9-00 மணிக்கு தீர்த்தம் எடுத்தல் மஹா அபிஷேகம் என்பன நடைபெறும்.

— தேவஸ்தானம்

"அன்னையின் சித்திரத் தேர்த் திருப்பணியினை அடியார்கள் அனைவரும் முன்னின்று பொருட்களை வாரிவழங்கி வெகுவிரைவில் பூர்த்தியடைய செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்"

அன்பைப் புகட்டி உந்தன் அற்புதம் பலபல காணச் செய்தாய்

உந்தன் அருட்கடல் பெருக்கெடுத்தோட வேண்டி நின்பாதம் தொழுகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:

| இராஜேஸ்வரி ரேடஸ் | பேபி ரேட்டோ |
|---|---|
| பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி | பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி |

(31815)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 03 – 02 – 1931

மறைவு: 13 – 06 – 1994

காரைநகர் களித் தருவைச் சேர்ந்தவரும், சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய

## அமரர் தம்பமுத்து செல்லையா

(ஜெமினி)

(உரிமையாளர் ஜெமினி ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

அந்தியேட்டி: 11 – 07 – 1994

திதி: 13 – 07 – 1994

அன்பின் உறைவிடமாய் மிகுந்த பாசத்தோடு எம்மை வழிநடத்திய எமது அன்பு அப்பாவே! திடீரென எம்மை தவிக்க விட்டு பிரிந்து சென்று விட்டீர்களே! என்றும் உங்கள் அன்பை மறக்க மாட்டோம்: அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் மற்றும் பற்பல உதவிகளைச் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்;

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 11-07-1994 இலும் திதி 13-07-1994 இலும் டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகம் வரும் இல்லத்தில் நடைபெற இருக்கின்றன. அன்னாரின் ஆத்மா சாந்திக்காக நடைபெற இருக்கும் வைபவங்களில் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுதல் செய்யும்;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செ. ஏரம்பநாதன்,<br>சுன்னாகம்.

(31837)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் செல்லையா யோகரத்தினம்

(முன்னாள் நாதன் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி உரிமையாளரும், ஆனந்தா (காண்டாமிருகம்) ஒடுகள் ஏக விநியோகஸ்தரும்)

தோற்றம்: 09 – 10 – 1916

மறைவு: 11 – 06 – 1994

திதி: 11 – 07 – 1994

"அன்பு காட்டி அணைத்திடும் நீர்<br>ஆறாத்துயரம் தந்தீரே<br>இன்று நாம் தனித்திருக்க<br>ஈசனடி சேர்ந்தீரே<br>என்று நாம் உமைக்காண்போம் - என<br>ஏங்கியே தவிக்கின்றோம்<br>உங்கள் தாள் பணிகின்றோம்<br>உங்கள்பணி தொடர்கின்றோம்"

"உங்கள் ஆத்மா சாந்தியடைய<br>ஆண்டவன் அருள் தருவாராக"

இன்று (11-07-1994) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும், மகேஸ்வர பூசையிலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,<br>குடும்பத்தினர்;

தபாலகத்தோர் வீதி,<br>சாவகச்சேரி.

(31827)

---

# தனியார் கல்வி நிறுவனங்கள் பிரத்தியேக வகுப்புகளுக்கான பொது ஒழுங்கு விதிகள்

01. புதன்கிழமை பூரண விடுமுறையாகும்
02. தமிழீழ தேசிய விடுமுறைக்கான நாட்கள் பூரண விடுமுறை நாட்களாகும்.
03. பாடசாலை நாட்களில் அதிகாலை வகுப்புக்கள் நடாத்தப்படமாட்டா.
04. பாடசாலை நாட்களில் செவ்வாய், வியாழன் மாலை 4 மணி முதல் சகல வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படும்.
05. பாடசாலை நாட்களில் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை 4 மணி முதல் 11, 12, 13 ஆம் ஆண்டு ஆகிய வகுப்புக்கள் மட்டும் நடாத்தப்படும். ஏனைய ஆண்டுகளுக்கு நடாத்தப்படமாட்டாது.
06. பொது விடுமுறை தினங்கள் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் வருமெனில் சனி, ஞாயிறு போன்று காலை 6 மணி முதல் சகல வகுப்புக்களும் நடாத்தப்படும்.
07. தவணை விடுமுறை நாட்களில் திங்கள், வெள்ளி நாட்களில் 12 மணிக்கு பின்னரும் செவ்வாய், வியாழனில் சனி, ஞாயிறு போன்றும் சகல வகுப்புக்களும் நடாத்தப்படும்.
08. உச்சக் கட்டணமாக கீழ் வரும் அட்டவணைப்படி அறவிடப்படும் எனவும் மேலதிகமாக அலகு ரீதியாகவோ, மீட்டல் பயிற்சி, வினா-விடை எனவோ தனிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

| | |
|---|---|
| க. பொ. த (சா/த) உம் அதற்குட்பட்டவையும் மாலை வகுப்பு / பகல் முழுநேரம் / சனி, ஞாயிறு முழுநேரம் | 20/- X 6 -> 120/- |
| க. பொ. த (உ/த) மாலை வகுப்பு / பகல் முழுநேரம் / சனி, ஞாயிறு முழுநேரம் | 30/- X 4 -> 120/- |

| | G A Q. 1st in Com. | B. A. B. Com. Part I | B. A. B. Com. Part II |
|---|---|---|---|
| பிரதான பாடம் | 75/- | 100/- | 100/- |
| 3 பாடம் | 200/- | 240/- | 270/- |
| துணைப் பாடம் | 25/- | 60/- | — |

09. க. பொ. த. உயர்தர வகுப்பில் அதிகூடிய மாணவர் தொகை — 200 ஆகும்
க. பொ. த சாதாரண / உட்பட்ட வகுப்புக்களில் மாணவர் தொகை — 150 ஆகும்.
10. பாடக் குறிப்புகள் 1 பிரதி (றோணியோ) 2 ரூபாவுக்கு மேல் அறவிடப்படமாட்டாது.
11. அனுமதிக் கட்டணமாக எப் பிரிவிற்கும் 20 ரூபாவிற்கு மேல் அறவிடப்படமாட்டாது.
12. அரச கூட்டுத்தாபன, கூட்டுறவு ஊழியர்கள் பகல் நேர வகுப்புகளில் பணியாற்றமாட்டார்கள்.
13. பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும். அத்துடன் எமது கல்வி நிறுவனத்தில் வினா - விடை வகுப்புக்கள் அம்மாணவர்களுக்கு இலவசமாக நடாத்தப்படும்
14. நிறுவன மொத்த வருவாயில் பத்து வீதத்தை உதவு நிதியாக வழங்குவோம்.
15. மேற்படி உதவு தொகை மாணவர்களிடம் இருந்து பெறப்பட மாட்டாது.
16. வினா - விடை, அலகு ரீதியாக விளம்பரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட மாட்டாது.
17. நிறுவனங்களில் ஆவணங்கள் ஒழுங்காக பேணப்படும். வகுப்புக்கள் நடைபெறும் நேரங்களில் நிறுவனத்தில் காணப்படும்.
18. பகல் நேர வகுப்புக்கள் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் 8 மணி முதல் 2 மணி வரை நடைபெறும். இவ்வகுப்புகளில் எக்காரணம் கொண்டும் பாடசாலை மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
19. தனியார் கல்வி நிறுவனங்களில் முதன்மை ஆசிரியர்கள், தொலைக் கல்வி போதனாசிரியர்கள், அதிபர்கள் கற்பிக்கமாட்டார்கள்.
20. தனியார் கல்வி நிறுவனங்களில் இலவச மாணவர்களுக்குக் க. பொ. த. உயர்தர வகுப்பில் 15 மாணவர்களுக்கும் க. பொ. த. சாதாரண மாணவர்களுக்கு 10 உம் ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.
21. பாடசாலை நாட்களில் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் பாடசாலை கல்விக்குரிய எந்த ஒரு வகுப்பும் நடைபெற மாட்டாது.
22. ஒவ்வொரு மாத சந்தாவும் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். நிலுவைகள் 3 மாதங்களுக்குரியதை ஒன்றாக சேர்த்து ஒவ்வொரு மாத சந்தாவுடனும் செலுத்த வேண்டும். தவறின் அங்கத்துவம் இழக்க வேண்டி நேரிடும்.
    1. நிறுவன மொத்த வருவாய் ரூ. 5000 க்கு மேல் பெறுபவர்கள் மாணவர்க்கு பற்றுச் சீட்டு வழங்க வேண்டும்.
    2. பாடசாலை தவணை விடுமுறை காலங்களில் திங்கள், வெள்ளி இரு நாட்களிலும் பாடசாலை ஆசிரியர்கள் 12 மணிக்கு முன்னர் பகல் நேர வகுப்புக்கு ஆயினும் கற்பித்தல் ஆகாது.

★ இவ் ஒழுங்கு முறைகள் 01 - 07 - 1994 இல் இருந்து நடைமுறைக்கு வரும்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,<br>யாழ். மாவட்டம்.

[கி-8626]

---

16ஆம் ஆண்டு நினைவஞ்சலி | ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## முருகர் சின்னத்தம்பி

(சாரதி இலங்கை போக்குவரத்து சபை)

மலர்வு: 13 – 04 – 1943

உதிர்வு: 22 – 05 – 1978



திருமதி

## சின்னத்தம்பி இராஜமலர்

மலர்வு: 30 – 08 – 1945

உதிர்வு: 22 – 06 – 1993

உள்ளம் உருகுது உங்களை நினைக்கையிலே!<br>கண்கள் தேடுது உங்கள் கருணைமுகம் எங்கேயென்று!<br>உங்களைப் பிரிந்து பதினாறாண்டு, ஓராண்டு சென்றாலும்-அப்பா அம்மா!<br>ஒரு கோடி யுகம் போனது போன்ற உணர்வு எங்களுக்கு!<br>எத்தனை யுகம் போனாலும் அப்பா, அம்மா எங்களை விட்டு அகலாது உங்கள் நினைவு!<br>எங்கள் உயிர் துடிப்போ உங்கள் நினைவலைகளில்!<br>மறவோம் மறவோம் தந்தையே, தாயே இம்மண்ணும் விண்ணும் உள்ளவரை!<br>எமக்காக நீங்கள் வாழ்ந்தது போல் உங்கள் நினைவை!<br>உள்ளத்தில் வைத்து உருகிக் கொண்டிருக்கிறோம்!

உங்கள் பிரிவால் துயருறும்,<br>பிள்ளைகள், மருமக்கள்,<br>சகோதரங்கள், மைத்துனர்மார், மைத்துனிமார்,

குணமங்கால்,<br>மல்லாகம்,

தற்காலிக முகவரி,<br>நவாலி வடக்கு, மானிப்பாய்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அழுத்தம் போட உந்துவது யார்?

அமெரிக்காவின் உலக மத நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி செல்வி எலிசபெத் ஒலிவே. அவர் ஒரு பத்திரிகையாளருமாவார். வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்து மக்களின் வாழ்க்கை நிலைமைகளை அவர் அவதானித்திருக்கிறார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வை அவர் இருட்டறை வாழ்க்கையாகவே காண்கிறார். இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்வதற்கு கிழக்குப் பகுதி மக்கள் அஞ்சுவதையும் அவர் அவதானித்திருக்கிறார்.

அவர் தமது குறுகிய கால விஜயத்தின் போது தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தையும், அவர்கள் தமது இலட்சியத்தில் உறுதியாக இருப்பதையும், வெளிநாட்டார் உதவி இல்லாமல் தமது சொந்தப் பலத்திலேயே நிற்கும் மனோபலம் உள்ளவர்களாக விளங்குவதையும் கண்டறிந்து விட்டார்.

அது மட்டுமன்றி ஈழத்தமிழர்களின் போராட்டம் குறித்து வெளி உலக மக்கள் குறிப்பாக அமெரிக்க மக்கள் உரியவாறு அறிந்து கொள்ளவில்லை என்பதையும், அதனால் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உணரவில்லை என்ற உண்மை நிலையையும் தெரியப்படுத்தி உள்ளார்.

ஈழத் தமிழர் போராட்டம் குறித்த சரியான, உண்மையான நிலைப்பாடு உலகத்துக்கு முழு அளவில் தெரியாது என்பதனை நாமும் இப்பத்தியில் அடிக்கடி எடுத்துக் கூறியுள்ளோம். வெளிநாட்டவரில் பலருக்கு தமிழர் போராட்டத்தின் தாற்பரியமே தெரியாது. தெரிந்தவர்களிலும் அதனைப் பிழையாகவே புரிந்துகொண்டுள்ளனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் அதற்கு எதிரான ஓர் ஆயுதக்குழுவுக்கும் இடையில் நடைபெறும் உள்நாட்டுச் சண்டை என்று மட்டுமே அவர்கள் தெரிந்துவைத்திருக்கிறார்கள்.

மேற்கு நாடுகள் அக்கறை எடுத்துப் பெரிதுபடுத்திப் பிரசாரம் செய்யும் போராட்டங்களே மக்களுக்கும் பெரிதாகத் தெரிகின்றன. அதனால் இலங்கையில் சிங்கள அரசுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் நடைபெறும் போர் பற்றிய சரியான, உண்மையான தகவல்கள் கிடைப்பதில்லை.

எமது போராட்டத்துக்கு வெளிநாடுகளில் இருந்து தார்மீக ஆதரவு அவசியம். அதனை வளர்ப்பதற்கு போராட்டம், அதன் நோக்கம், அதன் வடிவம், அதன் தாக்கம், அதன் விளைவுகள், தமிழர்களின் அரசியல் தாகம், அதன் மீதான இலட்சிய உறுதி, இங்குள்ள கள நிலைமைகள், மக்கள் அவலங்கள் என்பன வெளிநாட்டாருக்கு அறியப்படுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் எங்கள் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும், அதனை முடிவுக்குக் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தையும் வெளியுலக மக்கள் புரிந்து கொள்வார்கள். இதனை இடித்துக் கூறும் வகையில் செல்வி எலிசபெத்தின் தகவல்கள் அமைந்துள்ளன.

மேற்கத்திய நாடுகளும், அமெரிக்காவும் இலங்கைக்கான சகல உதவிகளையும் நிறுத்தத் தொடங்கினால் இருதரப்பினருக்கும் பேச்சுவார்த்தைக்கு வர முடியும் எனத் தாம் நம்புவதாகவும் செல்வி எலிசபெத் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு நாடுகளும், அமெரிக்காவும் கடன் என்றும் உதவி என்றும் கொட்டிக் கொடுப்பது ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கே. ஆகையால் அந்த உதவிகள் நிறுத்தப்பட்டால், அழுத்தம் போட்டால் ஸ்ரீலங்கா அரசு பேசுவதற்கு உடன்படும். இது பலரும் பல தடவைகளில் வலியுறுத்திய கருத்து.

அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ அல்லது ஜப்பானோ ஸ்ரீலங்கா அரசுக்கு உதவுவதை நிறுத்துமாறு அழுத்தம் கொடுப்பதற்கு உந்துவது யார்? எவ்வாறு? — என்பனவே பதில் காண வேண்டிய முக்கிய வினாக்கள்!

வடகொரியாவில்

# தந்தைக்குப் பின் தனயன் ஜனாதிபதியாவதில் சிக்கல்

## அதிகாரப்போட்டி நிலவுவதாக தகவல்

பியொங்யாங், ஜூலை 11

ஜனாதிபதி கிம்-இல்-சுங்கின் மறைவைத் தொடர்ந்து வடகொரியாவின் ஆட்சிப் பீடத்தில் அதிகாரப்போட்டி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவின் ஆயுதப் படைகளின் தளபதியாகத் தற்போது உள்ளவரும் மறைந்த ஜனாதிபதியின் புதல்வருமான கிம் யொங் இல் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்கலாம் என்று பெரும்பாலும் கருதப்படுகிறது. இருப்பினும் இவருக்கு ஆயுதப் படைகள் மத்தியில் ஒருமனதான ஆதரவில்லை என்று தெரிவதாக பி.பி.ஸி. அறிவித்தது.

மறைந்த தலைவர் கிம்-இல்-சுங் முன்னாள் சோவியத் யூனியனில் கெரில்லாவாக அஞ்சலம் அடைந்திருந்த போது — 1941இல் அவரது புதல்வரான கிம் யொங் இல் பிறந்தார்.

எதிர்வரும் 17ஆம் திகதி கிம் இல் சுங்கின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற பின்னர் தான் தந்தை வகித்து வந்த ஜனாதிபதிப் பதவி தனயனுக்குக் கிடைக்குமா என்பது நிச்சயமாகத் தெரியவரும் என்று பி.பி.ஸியின் செய்தி ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கிம் யொங் இல் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் கம்யூனிஸ நாடு ஒன்றில் குடும்ப ஆதிக்கம் ஆட்சி ஏற்படுவது இதுவே முதல் தடவையாக இருக்கும் என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

இதேவேளை — எதிர்வரும் 25ஆம் திகதி வடகொரியா—தென்கொரியாத் தலைவர்களின் உச்சிமாநாடு திட்டமிட்டபடி நடைபெறும் என்று தாம் நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்திருக்கிறார். (எ)

## துரைராசா உருவப் படம் திரை நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் உருவப்படம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினத்தால் யாழ். பல்கலைக் கழகப் புவியியல்துறை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்குத் திரை நீக்கம் செய்யப்படும்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நினைவஞ்சலியுரையை நிகழ்த்துவார். (க)

## அதிபர் கூட்டம்

வலிகாமம் தெற்கு ஜூலை 11

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியசாலையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (க-152)

## பயிற்சிப் பரீட்சை

வலிகாமம் தெற்கு ஜூலை 11

ஐந்தாம் ஆண்டுப்புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள உடுவில் கல்விக் கோட்டப்பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப்பரீட்சை இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை மருதனாமடம் ர்இராமநாதன் கல்லூரியில் மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு வேலைகள் மேற்கொள்ளப்படும். (க-152)

## சிறிமாவோவை உபசரித்த பொலீஸ் இன்ஸ்பெக்டர்

### 4 இடங்களுக்கு இடம் மாற்றம்

கொழும்பு, ஜூலை 11

வைத்திய சிகிச்சைக்காக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சிங்கப்பூருக்கு பயணமான சமயம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவரை வரவேற்று உபசரித்த பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர் காமினி மல்வன்னாவை அரசாங்கம் அடுத்தடுத்து நான்கு இடங்களுக்கு மாற்றியுள்ளது.

நீர்கொழும்பு, பம்பலப்பிட்டி, கந்தானை ஆகிய இடங்களுக்கு அவர் அடுத்தடுத்து இடமாற்றம் செய்யப்பட்டார்.

சிறிமாவோ வைத்திய சிகிச்சை பெற்று நாடு திரும்பிய பின்னர் அந்தப் பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர் கடைசியாக பளாலிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

இத்தகவலை கம்பஹா மாவட்ட முன்னாள் ப. க. எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்தார். (இ-எ-6)

## புலிகளின் குரல் வானொலியில்

11 — 07 — 1994

திங்கள் இரவு

- ★ 8 01 — தளிர்கள்
- ★ 8-20 — செதிய்ச்சரம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — ''பழம்பெரும் யோகா சக்கலைஞர் சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களுடனான செவ்வி''

12 — 07 — 1994

செவ்வாய் காலை

- ★ 7. 02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய நாதம்
- ★ 7. 30 — செய்திகள்
- ★ 7. 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7. 40 — தாயகப் பாடல்கள்

வடக்கு-கிழக்கு

# இணைப்பு பற்றி புலிகளுடன் சந்திரிகா பேசுகிறாராம்

## நெவில் பெர்னாண்டோ பேச்சு

கொழும்பு, ஜூலை 11

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி சந்திரிகா குமாரணதுங்கா விடுதலைப்புலிகளுடன் பேசிவருவதாக, சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி ஐ. தே. கவில் சேர்ந்த முன்னாள் எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாணந்துறை, கல்கொட சிறிமகாவிகாரையில் மகாசங்கத்தினர் மத்தியில் பேசுகையில் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதுவும் சுதந்திரக்கட்சியிடம் இல்லை என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா பேச்சு நடத்தி வருவதை சிங்கள வாக்காளர்களும் மற்றும் சிறுபான்மை வாக்காளர்களும் கடுமையாக எதிர்க்கவேண்டும் என்றும் அவர் கோரினார். (எ)

## ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவே தெரிவாவார்!

### பிரபல சோதிடர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 11

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவரது புதல்வி சந்திரிகா ஆகியோரது சாதகங்களின்படி, ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவே இறுதியில் தெரிவு செய்யப்படுவார்.

பிரபல சோதிடர் எச் ஜி. அத்துக்கோறள என்பவரை மேற்கோள்காட்டி இத்தகவலை ''சண்டே ரைம்ஸ்'' வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

## 138 இலங்கையர்கள் இத்தாலியில் கைது

ஐரோப்பாவுக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைய முயன்ற 138 - இலங்கையர்கள் பிடிபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜேர்மனிக்கு கொண்டு செல்வதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் இத்தாலியின் தென்பகுதிக் கரையில் இறக்கிவிடப்பட்டனர்.

உக்ரேய்னில் இருந்து ஜேர்மனிக்கு அழைத்துச் செல்வதற்காக தம்மிடமிருந்து ஆளுக்கு 5 4 ஆயிரம் டாலர்களை கடத்தல் காரர்கள் வாங்கினர் என்று இவர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என இத்தாலியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-ஜ)

## ஆனையிறவு ராணுவ அதிகாரி பலாமரத்தில் தற்கொலை

கொழும்பு, ஜூலை 11

ஆனையிறவு முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவர் பலா மரத்தில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அஜித் பிரியசாந்த (22 வயது) ஆனையிறவு இராணுவ முகாமில் பணியாற்றி வந்தார்.

காலஞ் சென்ற இராணுவ அதிகாரி தமது மனைவியுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அவரது சொந்த ஊரான தம்பதல்ல என்ற இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

மனமுடைந்த இராணுவ அதிகாரி ஆனையிறவு முகாமுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல மறுத்ததுடன் வீட்டுக்கு அருகில் உள்ள பலாமரம் ஒன்றில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## நாடாளுமன்ற கலைப்பு பிரகடனம்: சோதிடர் ஆலோசனைப்படி கையொப்பமிட்டார் டி.பி.!

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதி விஜேதுங்க சோதிடர்களின் ஆலோசனைப்படி நாடாளுமன்றத்தை கலைக்கும் பிரகடனத்தில் 24-6-94 அன்று காலை 8 32 மணிக்குக் கையெழுத்திட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

எனினும் — பிரகடனம் அன்றைய தினம் நள்ளிரவுக்குப் பின்னர் தான் நடைமுறைக்கு வந்தது. (ஒ-எ)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில்

# ஊழலில் ஈடுபடும் அமைச்சர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்படுவர்

## பிரசாரக்கூட்டத்தில் சந்திரிகா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் 20 அமைச்சர்களே இருப்பர். அவர்களில் எவரும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது கண்டு பிடிக்கப்பட்டால், அவர்கள் காலிமுகத்திடலில் பகிரங்கமாகத் தூக்கிலிடப்படுவர்.

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க அவிசாவளை நகரசபை மைதானத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது முன்கண்டவாறு கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறுகிறது. அப்படி ஒரு பிளவும் எம் முன்னணியில் இல்லை. ஆனும் கட்சிதான் ஆறு குழுக்களாகப் பிளவுபட்டுள்ளது. கடைசியாக — ஆறாவது குழு அனுரா பண்டாரநாயக்காவின் தலைமையில்தான் இயங்குகின்றது என்றும் சந்திரிகா கூறினார்.

சொந்தத் தாயாருடனும் சகோதரியுடனும் ஐக்கியமாக வாழ முடியாதவரான அனுராவுக்கு நாட்டின் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பது விந்தையாக உள்ளது என்று முன்னாள் ல. ச. எம். பி. ரிச்சர்ட் பதிரண தெரிவித்தார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடிய தலைவராக சந்திரிகா மட்டுமே இன்று விளங்குகின்றார் என்றும் அவர் கூறினார்.

தமது கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் தான் ஜனாதிபதி விஜேதுங்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார் என்று லங்கா சமசமாஜ கட்சித் தலைவர் பெர்னாட் சொய்சா தெரிவித்தார். (எ)

பொருளற்ற பெண் என்றால் உயிரற்ற சடமா?
இருளுக்குள் வாழ்வது தான் இவர்களின் விதியா?

நச்சுத்திரவம் தெளிக்கப்பட்ட

## பத்தாயிரம் மாம்பழங்கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

### கொடிகாமத்தில் சம்பவம்

தென்மராட்சி, ஜூலை 11

நச்சு திரவம் தெளித்து பழமாக்கி விற்பனைக்கு விடப்பட விருந்த பெரும் தொகையான மாம்பழங்கள் கொடிகாமம் பகுதி பொது சுகாதார பரிசோதகரினால் கண்டு பிடிக்கப்பட்டது. நச்சுத் திரவமும் மாம்பழங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மாம்பழங்கள் கடந்த 7 ஆம் திகதி பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

நச்சுத் திரவம் தெளிக்கப்பட்டு பழுக்க வைக்கப்படும் பழங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்குமென்பது குறிப்பிடத்தக்கது. (எ-117)

பாதுகாப்பு போதாதாம்

## பிரசாரக் கூட்டங்களுக்கு செல்ல டி.பி. பின்னடிப்பு

கொழும்பு, ஜூலை 11

பாதுகாப்புக் காரணங்களுக்காக தன்னை தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதை குறைத்துக் கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கட்சியினரைக் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாக 35 பெரிய பிரசாரக் கூட்டங்களில் மட்டும் ஜனாதிபதி கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

மக்கள் மத்தியில் தான் இழந்த செல்வாக்கை தாம் அறிவித்த தேர்தல் நிவாரணங்களால் தாம் மீட்டு எடுத்து விட்டதாக ஜனாதிபதி இப்போது கருதுவதாக ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

முன்னாள் அரச எம்.பிக்கள்

## பாவிக்கும் வாகனங்களை திரும்பப் பெற நடவடிக்கை

### ஜனாதிபதி செயலர் உத்தரவு

கொழும்பு, ஜூலை 11

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அரச உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட, வெளிக்கள உபயோகத்துக்கான வாகனங்கள் அனைத்தையும் திரும்பப் பெறும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கே. எச் ஜே விஜேதாஸ இது தொடர்பான உத்தரவை சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டப்பணிகளை மேற்பார்வையிடுவதற்காக இவ்வாகனங்கள் எம்.பிக்களுக்கு வழங்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட முன்னாள் எம். பிக்களிடம் இருந்து இவ்வாகனங்களைத் திரும்பப் பெற முடியாத நிலை ஏற்படுமிடத்து, அவ்வாகனங்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கும்படியும் அமைச்சுச் செயலாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

திரும்பப்பெற வேண்டிய வாகனங்கள் 40 வரை இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (எ)

## சரசாலையில் பாலர் பாடசாலை

தென்மராட்சி ஜூலை 11

சாவகச்சேரி வட்டப் பிரிவைச் சேர்ந்த லெப். ஆஷா லெப். வின்சன் ஆகியோரின் நினைவாக சரசாலை வடக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆஷா வின்சன் நினைவு பாலர் பாடசாலை கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு. அ. சொற்கோ தலைமையில் நடைபெற்றது.

ஈகைச்சுடரை சாவகச்சேரி வட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தீபா ஏற்றி வைக்க சரசாலை சிற்றூர்ப் பொறுப்பாளர் திருநேசன்தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். (ஒ-117)

நாடு திரும்பாததால்

## பாஸ்கரலிங்கம் பற்றிய மர்மம் நீடிக்கிறது

கொழும்பு, ஜூலை 11

எதிர்பார்க்கப்பட்டபடி நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் கடமைகளை மீண்டும் ஏற்பதற்காக கடந்த முதலாம் திகதி கொழும்பு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாஸ்கரலிங்கம் ஏன் நாடு திரும்பவில்லை என்பது தமக்குத் தெரியாது என்று அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாஸ்கரலிங்கம் லண்டனில் இருந்து நாடு திரும்பும்வரை, நிதி அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றும்படி டாக்டர் விக்கிரம வீரசூரியா பணிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் செயலாளராகப் பணிபுரியும் திரு. கே. எச். ஜே விஜேதாஸாவுக்கும் ஜனாதிபதியின் ஆலோசகராகப் பணிபுரியும் டாக்டர் விக்கிரம வீரசூரியாவுக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியைத் தவிர்ப்பதற்காக, லண்டனில் வைத்திய சிகிச்சை பெற்று வரும் திரு. பாஸ்கரலிங்கத்தை உடனடியாக நாடு திரும்பும்படி ஜனாதிபதி கேட்டுக் கொண்டதும் —

அதற்கிணங்க கடந்த முதலாம் திகதி நாடு திரும்பி உத்தியோகக் கடமைகளைப் பொறுப்பேற்பதாக பாஸ்கரலிங்கம் அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (எ)

## எதிரணிக்கு ஆதரவு

கொழும்பு, ஜூலை 11

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதென மலையகத்தில் உள்ள 17 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கும் கூட்டுத்தோட்டத்தொழிற்சங்கக்குழு தீர்மானித்துள்ளது. (எ)

## மீண்டும் ஓர் அவதாரம்...

உங்களைப் பாட
இங்கே
வார்த்தைகளுக்கு வலுவில்லை

உங்கள்
ஆளுமையை மதிப்பிட
என்னிடம் மாதிரியில்லை

கர்மயோகத்தின்
புத்துயிர்ப்பான
நீங்கள் ஓர் அவதாரமேதான்

நாங்கள் செய்த கன்மமா...
உங்கள்
கடமை சடுதியில் முடிந்தது?

எங்களை ஈடேற்ற
அந்தப் புன்னகையோடு
மீண்டும் ஓர் அவதாரம்
வாராயோ 'துரை' வேந்தே!

— என். சண்முகலிங்கன்

(அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின் 31ஆம் நாள் நினைவு நாள் இன்று)

குளம் கட்டி நிலம் நனைத்து
வளம் பெருக்கி நலம் காப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மிருசுவில் படித்த மகளிர்
குடியேற்றத்திட்டம் - துர்க்காபுரம்

# ஸ்ரீஞானதுர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

ஞானதுர்க்கா அம்பிகை அடியார்களே!

தன்னை நம்பி வழிபடும் அடியார்களைப் பாதுகாத்து நல்லருள் பாலித்து துர்க்காபுரம் என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீஞானதுர்க்கா அம்பாளுக்கு இவ்வருடம் 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடத்த திருவருள் கிடைத்துள்ளது.

இவ் உற்சவம் நிகழும் பவ வருடம் ஆனி மாதம் 29 ஆம் திகதி (13-7-94) புதன்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 6 ஆம் திகதி (22-7-94) வெள்ளிக்கிழமை இறுதிநாள் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். தினந்தோறும் 12.00 மணி முதல் ஸ்நபனாபிஷேகம், விசேட பூசையும், திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

உபயகாரர் விவரம்

1 ஆம் நாள் 13-7-94 புதன்
திரு சந்திரதேவா குடும்பம், ப.ம திட்டம், மிருசுவில்

2 ஆம் நாள் 14-07-94 வியாழன்
திரு. தியாகராசா குடும்பம், சங்கத்தானை

3 ஆம் நாள் 15-07-94 வெள்ளி
திருமதி கலா குடும்பம், மணியம்தோட்டம், யாழ்ப்பாணம்

4 ஆம் நாள் 16-07-94 சனி
திரு. ந கிருஷ்ணமூர்த்தி குடும்பம், சரசாலை
திரு. வி. தவக்குமார், அல்லாரை

5 ஆம் நாள் 17-07-94 ஞாயிறு
திருமதி புஸ்பராணி நவரத்தினம் குடும்பம்,
திருமதி புஸ்பலீலா பொன்னம்பலநாதர் ப.ம. திட்டம், மிருசுவில்

6 ஆம் நாள் 18-07-94 திங்கள்
திரு. விசயதாஸ், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

7 ஆம் நாள் 19-07-94 செவ்வாய்
திரு. முருகேசு குடும்பம், ப.ம திட்டம், மிருசுவில்,
திரு. விஜயன் குடும்பம், ப.ம. திட்டம், மிருசுவில்,
திரு. அருள் குடும்பம், ப.ம. திட்டம், மிருசுவில்

8 ஆம் நாள் 20-07-94 புதன்
திரு. விஜயகுமார் குடும்பம், வதிரி, கரவெட்டி

9 ஆம் நாள் 21-07-94 வியாழன்
திரு. விக்கினேஸ்வரன் குடும்பம், அல்லாரை

10 ஆம் நாள் 22-07-94 வெள்ளி
திரு. செல்லத்துரை குடும்பம், மீசாலை,
திரு. மணியம் குடும்பம், மீசாலை,
திரு இராஜலிங்கம் சகோதரர்கள், ப.ம. திட்டம், மிருசுவில்

பிரதம குருக்கள் உயர்பீடம்:
சிவஸ்ரீ கு ஸ்ரீகாந்தக் குருக்கள்
சங்கத்தானை

உற்சவத்தில் அனைவரையும் பங்குகொண்டு எல்லாம்வல்ல ஞானதுர்க்கை அம்பிகையின் பாதாரவிந்தங்களைத் தொழுது திருவருளைப் பெற்று நலம் பெறும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ 14-7-94 வியாழக்கிழமை உற்சவத்தின் போது உரும்பராய் திருமதி ச தியராணி குடும்பத்தினரால் கையளிக்கப்பட்ட ஆதிபராசக்தி சிலை ஒன்று 12 மணிக்கு பிரதிஷ்டை செய்யப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

துர்க்காபுரம், ஆலய தர்மகர்த்தா
ப.ம. திட்டம், மிருசுவில். (31865)


# பொதுத் தேர்தலை அவதானிக்க தெற்காசியப் பிரதிநிதிகள் குழு

## 15 உறுப்பினர் அங்கம் வகிப்பர்

கொழும்பு, ஜூலை 11

கொழும்பில் உள்ள கபேச்சை அமைப்பு ஒன்று விடுத்த அழைப்பை ஏற்று எதிர்வரும் பொதுத் தேர்தலை அவதானிப்பதற்காக மனித உரிமைகளுக்கான தெற்காசிய அமைப்பைச் சேர்ந்த பதினைந்து உறுப்பினர்கள் இலங்கைக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழ்க்கை மற்றும் சூழல் பாதுகாப்பு நிறுவனம் இந்த அழைப்பை விடுத்திருந்தது.

இந்த நிறுவனத்தின் செயலாளரான டாக்டர் ராஜேந்திர விஜேதுங்க தெரிவித்த தகவலின்படி—இந்த அவதானிப்புக் குழுவில் பூட்டான், பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

அண்மையில் நேபாளம் தலைநகர் காட்மண்டுவில் நடந்த மனித உரிமைகளுக்கான ஆசிய அமைப்பின் செயற்குழுக் கூட்டத்தில் இலங்கை விஜயம் பற்றி தீர்மானிக்கப்பட்டதாகவும் டாக்டர் விஜேதுங்கா தெரிவித்தார்.

இத்தகவலை "லங்காதீப" நாளிதழ் வெளியிட்டுள்ளது. (அ-எ-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். றோட்டறக் கழகம், எல். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று (திங்கள்) பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு!

பி. ப. 3 மணி — ஞானமுருகன் எதிர் அராலி அண்ணா

பி. ப. 4 மணி — பல்கலைக்கழக அணி எதிர் சென். நீக்கிலஸ் (எ)

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் வலைப்பந்தச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 17 வயது — சுண்டுக்குளி மகளிர் எதிர் உடுவில் மகளிர்

★ 19 வயது — சுண்டிக்குளி மகளிர் எதிர் உடுவில் மகளிர். (ஐ)

★ ★ ★

யாழ். மாவட்ட லியோ கழகம் நடத்தும் பூப்பந்தாட்டப் போட்டியின் முதல் பிரிவு ஆட்டம் இன்று காலை வை.எம். சி. ஏ. ஆடுகளத்திலும், 2 ஆம் பிரிவு ஆட்டம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ஐ)

## பாடசாலைகளில்

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு க.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஜ-152)

ஸ்ரீலங்கா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அவர் தொடர்ந்து சொன்னதாவது:-

இனநெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாட்டு உதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்காது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சண்டை மீண்டும் ஆரம்பமான பின்னர், விடுதலைப் புலிகளுடன் பேச்சுநடத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து நிபந்தனைகளை விதித்து வந்திருக்கிறது.

பேச்சுகளில் திரு பிரபாகரன் நேரடியாக கலந்துகொள்ள வேண்டும் என்றும், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்றும் அரசாங்கம் வற்புறுத்தி வருவதால் தான் நடவர்கள் முக்கியமான முயற்சிகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது.

விடுதலைப் புலிகள் முதலில் ஜனநாயக அரசியலில் பிரவேசிக்க வேண்டும். ஆயுதங்களை அவர்கள் கீழே வைக்க வேண்டும் என்பதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம். ஆயுதங்களைக் கீழே வைப்பது சிறந்த விடயம். இல்லாவிட்டாலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் நாம் ஈடுபடலாம்.

மாகாணங்களுக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவதன் மூலமும் — மாகாண எல்லைகளை மீள வரைவதன் மூலமும் சிக்கலான வடக்கு — கிழக்கு இணைப்பு பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காணக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும் என்று நாம் நம்புகிறோம்.

— இவ்வாறு அவர் கூறினார் [அ-எ-3]

வீடுதேடி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் —

'வடக்கு - கிழக்கு யுத்தம் பணம் சம்பாதிக்கும் ஒன்றாக இன்று மாறிவிட்டது. அதனால் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி ஒருவர்தானும் அக்கறை காட்டாது உள்ளனர்''— என்று தெரிவித்தார்.

யுத்தம் என்ற பெயரில் கமிஷனாக பெரும் தொகைப் பணம் சிலரின் சட்டைப்பைகளை நிரப்பி வருகின்றன. ஆகவே யுத்தத்தை நிறுத்தும்படி மக்கள் அரசாங்கத்தை நெருக்க வேண்டும் — என்றும் அவர் கூறினார். (எ)


NEW SCIENCE HALL
Kannathidy Jaffna
94 A/L
DAY CLASS
PURE / APPLIED MATHS
திரு வெக்டர்
12 - 07 - 94
TUE 8.00 A. M
(சி 8727)


நுவரெலியா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டதாகவும் மாவட்ட பொலீஸ் அதிபர் காமினி அமரக்கோன் தெரிவித்ததாக "த ஐலண்ட்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி பிரிவினைவாதிகளுடன் தொடர்புடைய சக்திகள் நுவரெலியாவினுள் கடந்த சில தினங்களில் ஊடுருவியுள்ளன என்று கிடைத்த தகவலை அடுத்து—

நுவரெலியாவின் சகல பொலீஸ் பிரிவுகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சிவில் உடையிலும் பொலீஸ் குழுக்கள் நுவரெலியா நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் ரோந்து புரிந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-எ)

## ஆலயங்களில்

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தில் புதிய தேர் வெள்ளோட்ட வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறும். (எ-111)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தின் அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறும் உற்சவத்தில் தினமும் மாலை 6.45 மணிக்கு திரு. செ. சத்தியமூர்த்தி 'திருவிளையாடற் புராணம்'' தொடர் விரிவுரையை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் குருபூசைத் தின நிகழ்ச்சிகள் இன்று முற்பகல் 11 மணிக்கு இணுவில் பரமானந்தவல்லி அம்பாள் ஆலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன (ஐ-3)

## வடிவேல் சுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 11

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் 4 ஆவது ஆண்டுக் குருபூசைத்தினம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில், உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சந்நிதியில் இடம்பெறும். (க)

யாழ்தேவி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த இருவரும் மருத்துவமனையில் வைத்தே மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த நிலையில் வேறு ஏழு பேர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பெரும்பாலானவர்கள் காலில் காயமடைந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து வந்த பொலீஸாரும் இராணுவத்தினரும், குண்டு வெடித்த பெட்டியில் இருந்த பயணிகள் அனைவரையும் பொலீஸுக்கு கூட்டிச் சென்று விசாரணைக்குட்படுத்தினர் என்றும் பயணிகள் தெரிவித்தனர்.

குண்டு வெடித்ததும் பெட்டியில் இருந்த பயணிகள் கையில் அகப்பட்ட தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு பதறியடித்த வண்ணம் வெளியே ஓடியதாகவும் அந்தப் பயணி மேலும் தெரிவித்தார். (அ-எ-3)

பாதுகாப்பை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீது பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகையில், தாம் சுதந்திரக் கட்சியில் சேர்ந்ததற்காகவா தமக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது என்றும் அவர் வினவியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ள முன்னால் சு.க. எம். பி.க்களுக்கு பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (எ)

## இன்று

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் திருவிழா ஒழுங்குகள் சம்பந்தமான முடிவுகள் எடுப்பதற்கு யாழ். மாநகராட்சி மன்றத்தின் பண்டாரமாளிகை வளவில் அமைந்திருக்கும் ஆணையாளர் பணிமனையில் இன்று (திங்கட்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடைபெறும்.

இதில் கலந்து கொள்ளுமாறு தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

★ ★ ★

விஞ்ஞான செயல்முறை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தெல்லிப்பழைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஆறில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விஞ்ஞான செயல் முறைத் தேர்வு இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் நடைபெறும் எனக் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஒ)

கொழும்பில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக வாழ்ந்தவர்கள் கூட யாழ்ப்பாணம் வருவதைக் காணக் கூடியதாக இருந்தது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-3)

இருவரை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிகள் இறங்கினர். நீர் நிரப்புவதற்காக ரயிலில் இருந்து எஞ்சின் கழற்றப்பட்டது. அதனால் ரயில் பெட்டிகள் எல்லாம் ஓரே இருட்டாகக் காணப்பட்டன; அப்போது முன்பக்கமாக சத்தம் ஒன்று கேட்டது. ரயிலின் ஒரு பெட்டியுடன் இன்னொரு பெட்டியை இணைப்பது போன்ற அச்சத்தம் இருந்தது. அதனால் நான் அது பற்றி கவனிக்கவில்லை அக்கறைப்படவும் இல்லை.

சிறிது நேரத்தில் ரயில் நிலைய மேடையில் பதற்றம் நிலவியது "ஸ்ரெச்சரில்" பெண் ஒருவரையும் ஆண் ஒருவரையும் வைத்து தள்ளிக் கொண்டு செல்வதைக் கண்டேன்.

பின்னர் ரயில் நிலைய அதிகாரிகள் எல்லாப் பயணிகளையும் அந்த ரயிலில் இருந்து இறங்கி 3 ஆவது மேடையில் அமரச் சொன்னார்கள் சிறிது நேரம் அங்கே அமர்ந்து இருந்து விட்டு பயணிகள் மீண்டும் ரயிலில் ஏறிக்கொண்டனர்.

இராணுவத்தினர் வந்து ரயிலின் முன்பக்கத்தையும் பின்பக்கத்தையும் இருதடவைகள் சென்று பார்த்தனர்.

பின்னர் அந்த ரயில் தொடர்ந்து செல்லாது என்றும் வேறு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது.

எனினும், குண்டுவெடிப்பினால் சேதமடைந்த பெட்டியைக் கழற்றிவிட்டு அதே ரயிலை தொடர்ந்து செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

வெளியே இருந்து ரயில் பெட்டி மீது ஏதோ ஒரு பொருள் வீசப்பட்டதாக சிலர் பேசிக்கொண்டனர், அது பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது – இவ்வாறு நடேசபிள்ளை தெரிவித்தார்.


வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? சருமரோகமா? மூலரோகம ? தொய்வு வியாதியா? நீரிழிவா? மலேரியாவா? குழந்தைகளின் பிணிகளா? உடல் பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? கவலை வேண்டாம்!
சிறந்த சிகிச்சை, உரிய ஆலோசனை வழங்கப்படும்.

தினமும் காலை 8·30 முதல் 12-30 வரை
பிற்பகல் 3-00 முதல் 6-00 வரை

டாக்டர் த. சிவானந்தன்
"சிவா வைத்தியசாலை"
384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(31860)



மரண அறிவித்தல்

வி. சிவஞானசுந்தரம்
(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், சக்கடத்தார் வீரபத்திரர் கோயில், தர்மகர்த்தா)

சாவகச்சேரி, கோவில் குடியிருப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம் தம்பதிகளின் புதல்வர் சிவஞானசுந்தரம் அவர்கள் 09-07-1994 இல் சிவபதமடைந்து விட்டார்

அன்னார் மகாலட்சுமியின் அன்புக் கணவரும், லலிதா, சிவகுமார் (பிரதம பொறியியலாளர், கட்டடத் திணைக்களம் கொழும்பு, தற்போது U. K), கலாநிதி சுரேந்திரகுமார் (லீட்ஸ் பல்கலைக் கழகம், U. K.), சுந்தரலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் (பிரதம லிகிதர், பிரதேச சபை, கண்டாவளை), கமலசாந்தி (U K), கௌரி (U. K). சூரியபாலன் (Accountant கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஷர்மிளி, றெசரனி, முகுந்தினி, நிசாந்தினி, உருத்திரன், பிறவின், வீணா, அருணன் ஆகியோரின் அன்புப் பேரனும், மீனாம்பிகை, நிர்மலநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (11-07-1994) காலை 10 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
லலிதா பாலசுப்பிரமணியம்.
(மகள்)
கைலாசபிள்ளை வீதி,
சாவகச்சேரி. [31859]





11-07-1994 இன்று முற்பகல்
11.00 மணிக்கு
மங்களகரமான திறப்புவிழா
"குளிருவி"
திறமான சுவையான
❖ குளிர்களி வகைகள்
❖ குளிர்பானங்கள்
❖ சிற்றுண்டி வகைகள்
அருந்தி மகிழ்ந்திட
குளிருவி
இல. 157, இராசன் சாலை, யாழ்ப்பாணம்.
(31862)





கொக்குவில் - நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய
வருடாந்த
லக்ஷார்ச்சனை சண்டிஹாஹோம
விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பவவருஷம் ஆனி மாதம் 28 ஆம் திகதி (12-7-94) செவ்வாய்க்கிழமை லக்ஷார்ச்சனை ஆரம்பமாகி ஆடி மாதம் 6 ஆம் திகதி (22-7-94) வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தன்று நிறைவு பெறும். அத்தருணம் அம்பாள் அடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

குறிப்பு:-
ஆடி மாதம் 6 ஆம் திகதி (22-7-94) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு சண்டிஹாஹோமம் ஆரம்பமாகி 9.00 மணிக்கு பூர்ணாகுதி நடைபெற்று மலை லக்ஷார்ச்சனை பூர்த்தி நடைபெறும்.

தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
தெய்வீக இலக்கியப்பேருரை
"மஹாபாரதம்"
நிகழ்த்துபவர்
தமிழருவி திரு. த. சிவகுமாரன்
(காரைநகர் கம்பன் கழகம் - ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி)
அவர்கள்

(சி/8728) ஆலயபரிபாலன சபை



31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பேராசிரியர் அ. துரைராசா

எங்கள் உளம் நிறைந்த ஏந்தலே நீங்கள்
எவ்வுலகு சென்றாலும் எம்மை மறந்தாலும்
உங்களை நாங்கள் ஒரு பொழுதும் மறந்திடோம்
யாழ். பல்கலை உள்ள வரை உங்கள் பெருநாமம்
மறவாது நகரும் தலைவனே!

ச. க. தனேந்திரன்
தலைவர்
யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்.

(சி/8729)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org